செ.வெ.எண்.193 நாள்.1.03.2010.

# பத்திரிக்கை செய்தி

2010-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு மட்டும் தற்போதைய இருப்பை கருத்தில் கொண்டு, தர்மபுரி மாவட்டத்தை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும், கிராமப்புறம் நீங்கலாக இதர நகர்ப்புறங்களில் (மாவட்ட தலைநகரம், நகராட்சி, நகரியம் மற்றும் பேரூராட்சி பகுதிகள் மட்டும்) எரிவாயு இணைப்பு இல்லாத புதிதாக வழங்கப்பட்டுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போதைய வழங்கல் அளவான மூன்று லிட்டரிலிருந்து இரண்டு லிட்டர் அதிகரித்து ஐந்து லிட்டர் மண்ணெண்ணெய் வீதமும், ஏனைய ஒரு எரிவாயு இணைப்பு உள்ள நகர்ப்புறங்களில் (மாவட்ட தலைநகரம், நகராட்சி, நகரியம் மற்றும் பேரூராட்சி பகுதிகள் மட்டும்) புதிதாக வழங்கப்பட்டுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், ஒரு எரிவாயு இணைப்பு உள்ள மற்றும் எரிவாயு இணைப்பே இல்லாத கிராமப்புறங்களில் புதிதாக வழங்கப்பட்டுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் (புதுப்பிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டுவரும் வழங்கல் அளவான தலா மூன்று லிட்டருக்கு இணையாக) தலா மூன்று லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்திற்கு மட்டும், ஒரு எரிவாயு இணைப்புள்ள மற்றும் எரிவாயு இணைப்பே இல்லாத புதிதாக வழங்கப்பட்டுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், ஏற்கனவே 2008–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வழங்கப்பட்டு வருவதுபோல், 2010-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கும் தலா மூன்று லிட்டர் வீதம் மண்ணெண்ணெய் வழங்க அரசு உத்தரவிடுகிறது.

க. சண்முகம்

**(க.சண்முகம்)**
**அரசு முதன்மைச் செயலாளர்,**
**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்**
**பாதுகாப்புத் துறை.**

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9